திரு. ஏ. ஆர். சுப்பையா : ஜீப்பினால் அநேக விரோதங்கள் ஏற்படுகின்றன. ஆகவே, ஜீப்பை எடுத்துவிட்டு எல்லோருக்கும் சைக்கிள் கொடுக்கும் திட்டம் வகுத்தால் எல்லோருக்கும் நலமாக இருக்கும். அதற்கு சர்க்கார் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதைச் சர்க்கார் ஏற்றுக் கொள்ளுவதில் சங்கடம் இல்லை. உறுப்பினர்கள் எல்லாம் ஏற்றுக் கொள்ளு கிறார்களா என்பதுதான் கேள்வி. மாண்புமிகு உறுப்பினர்கள் சைக்கிள் களையும் பயன்படுத்தி சிறப்பாக காரியம் ஆற்ற வழிவகை செய்து கொள்ளலாம்.

திரு. நா. வீராசாமி: ஒன்றியங்களுக்கு ஜீப்புகள் வழங்கப்படுவதால் நிறைய பெட்ரோல் செலவாகிறது. ஆகவே, ஸ்டாண்டர்டு வான்கள் வாங்கிக் கொடுத்தால் பெட்ரோல் குறைவாகப் பிடிக்கும். எல்லா ஒன்றியங்களுக்கும் ஜீப்களுக்குப் பதிலாக ஸ்டாண்டர்டு வான்கள் வாங்கிக் கொடுக்க வழி செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பல்வேறு ஒன்றியங்களில் பாதை வசதிகள் மற்றவைகள் கரடுமுரடாக இருப்பதால் ஜீப்பைத் தவிர வேறு வண்டியே செல்ல முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவேதான் ஜீப் ஒன்றியங்களுக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது

திரு. கே. எ. வகாப் : இதற்கு முன்பு ஜீப்பை சட்டமன்ற உறுப்பினர் களுக்குக் கொடுத்துக் கொண்டிருந்தவர்கள்கூட இந்தக் கேள்விக்கான பதிலைப் பார்த்தவுடன் இனிமேல் ஜீப் கொடுப்பார்களா என்று அச்சம் ஏற்படுகிறது. 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை அந்த ஜீப் காரை கண்டெம் செய்ய வேண்டு மென்று இப்போது விதிமுறை இருக்கிறது ஏழு எட்டு ஆண்டுகளில் ஜீப்பை மாற்றிக் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதற்கென்று சிலபல விதி முறைகள் இருக்கின்றன. தொழில் நுட்ப அதிகாரிகள் ஆராய்ந்து ஜீப் கார் பழுதடைந்து விட்டது என்று கூறி வேறு கார் கொடுக்க வேண்டுமென்று சிபாரிசு செய்தால் கொடுக்கப்படுகிறது

முத்துக்குளிப்பின் மூலம் கிடைத்த வருமானம்

*** 285 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1970-71, 1971-72-ம் ஆண்டுகளில் தமிழகத்தில் முத்துக்குளிப்பின் மூல மாகக் கிடைத்த தொகை எவ்வளவு ?

1973 மார்ச் 8]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: 1970-71, 1971-72-ம் ஆண்டுகளில் தமிழ்நாட்டில முத்துக்குளிப்பு ஒ துவும் நடைபெறவில்லை. முத்துக் குளித்தல் தொடர்ச்சியாக நடைபெறக்கூடியதுமல்ல. ஆண்டுதோறும் நடைபெறக்கூடியதுமல்ல. அது காலசுழற்சியில் ஒருமுறை நடைபெறுவதாகும். 26 ஆண்டுகளுக்குப் பின்னா, கடைசியாக 1955 முதல் 1961-ம் ஆண்டு வரை முத்துக்குளித்தல் நடைபெற்றது. 1971-ல் நடத்தப்பட்ட முத்துச்சிப்பிபார் ஆய்வு, 1973-ல் சில பகுதிகளில் முத்துக் குளிப்பு நடத்துவதற்கான வாய்ப்பு இருப்பதைப் புலப்படுத்தியுள்ளது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: தற்போது முத்துக்குளிப்பது, சங்கு குளிப்பது அரசுத் துறையில் நடக்கிறதா அல்லது தனிப்பெரும் முதலாளிகள் தரப்பில் நடக்கிறதா? அல்லது தொழிலாளர்களே முத்துக் குளித்து, சங்கு குளித்து தாங்களே எடுத்துக் கொள்கிறார்களா? அவர்களுக்கு அதை விற்க வசதி உண்டா? கூட்டுறவுச் சங்கங்கள் உண்டா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: முத்துக் குளித்தல் வேறு, சங்கு குளித்தல் வேறு. முத்துக் குளித்தல் இப்போது நடக்கவில்லை. சங்கு குளித்தல்தான் நடக்கிறது. கூட்டுறவு மூலமாக தொழிலாளர்களே சங்கு எடுக்கிறார்கள். தொடர்ந்து முத்துக் குளிப்பதற்கு கடலில் முத்துக்கள் இல்லை.

திரு. கே. எ. வகாப்: தொடர்ந்து முத்துக் குளிப்பதற்கு வேண்டிய முத்துக்கள் கடலில் இல்லையென்று சொன்னார்கள். ஜப்பான் நாட்டில் முத்துக்கள் பயிர் செய்கிறார்கள். செயற்கை முறையில் கடலில் பயிர் செய்கிறார்கள். ஜப்பான் கூட்டுறவோடு அந்த முறை நம் நாட்டிலும் மேற்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: அப்படி ஜப்பான் நாட்டோடு தொடர்பு கொண்டு மண்டபத்தில் ஆராய்ச்சி நடைபெறுகிறது. சிப்பிகளை எடுத்து இஞ்செக்ஷன் மூலம் ஏதோ ஒரு மருந்தைச் செலுத்தி கடலில் போட்டு செயற்கை முறையில் முத்துக்களை அதிகமாக எடுப்பது பற்றி மண்டபத்தில் ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது.

பிச்சையெடுத்தலைத் தடுத்தல்

* 286 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பழனி, ஸ்ரீரங்கம் போன்ற பக்தர்கள் கூடும் நகரங்களில் பிச்சைக்காரர்களின் தொல்லையை அகற்ற அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா?